சாத்தியக் கூறுகளைக் கருத்திற்கொண்டு, 1969-74 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி வருவாய், செலவுகள்பற்றிய நிதி மதிப்பீடு களை இக்குழு ஆராய்தல் வேண்டும்.

அத்தகைய வருவாய் மதிப்பீட்டிற்கும் செலவிற்கும் இடையே அது ஏற்றுக்கொள்கிற பற்றாக்குறையைப் போக்க இக்குழு வழி வகைகளைக் குறிப்பிடும்.

இக்குழு, மாநகராட்சியின் மூலதன வரவு-செலவுத் திட்டத் தையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஐந்து ஆண்டு களுக்குத் தேவையான மூலதன வாயில்களையும் ஆராய்ந்து, இவ் வாயில்களைப் பெறுவதற்கான வழிவகைகள்பற்றி ஆலோசனை நல்கும்.

இக்குழு மாநகராட்சிக்குத் தேவைப்படுகிற ரொக்க வசதிகளை ஆராய்ந்து, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், வணிக வங்கிகள் போன்ற நிறுவனங்களிடமிருந்து ஈட்டுறுதி ஆவணங்கள், சிறப்புக் காரிய ஆவணங்கள், பத்திரங்கள்மூலம் நிதி பெறும் வாய்ப்புகளைப் பற்றி இக்குழு ஆய்வு செய்யும்.

ஈட்டுறுதி ஆவணங்கள்மூலம் கிடைக்கிற வருவாயைப் பயன் படுத்துவது தமிழ்நாடு அரசு வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவது, ஆகியவைகுறித்த வரையறைகள், நிபந்தனைகள் பற்றி இக்குழு ஆலோசனை நல்கும்.

மாநகராட்சியில், வரிவிதிப்பு, வரிவசூல், வரியில்லாத வருவாய் கள் ஆகிய பணிகளை விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவ டிக்கைகள்பற்றி இக்குழு பொதுவாக ஆலோசனை நல்கும்.

இக்குழு தனது அறிக்கையை அளிக்கும்போது, உள்ளாட்சி நிதி விசாரணைக் குழு தனி அதிகாரி அளித்த ஆலோசனைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

இக்குழு அமைக்கப்பட்ட இரண்டு திங்களுக்குள்ளாகவே இடைக்கால அறிக்கை ஒன்றை மாநகராட்சிக்குத் தற்போதுள்ள இடர்பாடுகளைச் சமாளிப்பதற்காக அளிக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் மதிப்புடைய நகராட்சிக் கடன் பத்திரங்கள், பங்கு சான்றிதழ்கள் ஆகியவற்றை வெளியிட்டு நகராட்சிக் கடன் வாங்கி, இந்திய வங்கியில் வைப்பீடு செய்துள்ள தொகையை என்னென்ன காரியங்களுக்கும், நோக்கங்களுக்காகவும் செலவிடப்படவேண்டும் என்பதுபற்றியும் அரசுக்குத் திட்டவட்டமாக இக்குழு ஆலோசனை நல்கும்.

Nursing Orderlies

* 343. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether the designation of the Nursing Orderly has been altered;

(b) if so, the details thereof; and

(c) the details of other names altered in this service?

1971 ஜூலை 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செவிலியர் பணியாளரின் பெயர் 'செவிலியர் உதவியாளர்' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய உத்திரவு 13—5—1971 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண். 1253-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(உ) அதுபோன்று வேறு பெயர் மாற்றம் இல்லை.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நர்ஸிங் ஆர்டர்லி என்று சொல்லப்படுகிறவர்களுக்கு என்று குறிப்பிட்ட வேலை நேரக் கட்டுப்பாடு இருக்கிறதா? பொது விடுமுறை நாட்கள் அவர்களுக்கும் அனுமதிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது அவர்களுடைய பெயர் மாற்றத்தைப்பற்றியது, வேலை நேரத்தைப் பற்றியதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : நர்ஸிங் அஸிஸ்டெண்ட்ஸ் சமீபத்திலே மதுரையிலே கூடி தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி, தாங்கள் நான்காவது தரச் சிப்பந்திகளாக நடத்தப்படுவதாக முறையீடு கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த செவிலியர் உதவியாளர்கள் சங்க மாநாட்டில், அவர்கள் நான்காம் தர கடைநிலையில் இருக்கக்கூடாது, சுபிரியர் சர்வீஸ் என்ற வகையிலே சேர்க்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் 60 வயதிலே ஓய்வுபெறமுடியும் என்று சொன்னால், இவ்வாறு வேறு நிலை அவர்கள் கேட்கின்றபொழுது 55 வயதிலே ஓய்வுபெறவேண்டும், அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்டறியப்பட்டிருக்கிறது. அதற்குமேல் அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

Graduate Nurses

* 344 Q. Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) the number of persons who graduated from the College of Nursing from its inception in 1967 till March, 1971;

(*b*) whether any scheme has been evolved to fully utilise their services; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 19.

(இ) & (உ) அவர்களின் பணி இப்பொழுதே முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.